Ministry of Overseas Indian Affairs
www.moia.gov.in

MAHATMA GANDHI PRAVASI SURAKSHA YOJANA

# வெளிநாடு வாழ் இந்தியர் நல அமைச்சகம் மகாத்மா காந்தி பிரவாசி சுரக்ஷா யோஜனாவை அறிவிக்கிறது



மகாத்மா காந்தி பிரவாசி சுரக்ஷா யோஜனா (MGPSY) என்பது வெளிநாடு வாழ் இந்தியர் நல அமைச்சகத்தால் (MOIA) வெளிநாடுகளில் பணிபுரியும் இந்திய பணியாளர்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள ஒரு சிறப்பான, தன்னார்வத் திட்டமாகும்.

இந்தியாவுக்குத் திரும்பி வரும்போதான குடியேற்றத்துக்கெனவும், அதோடு வயதான காலத்துக்கான சேமிப்புக்காகவும், வெளிநாடுகளில் பணிபுரிகையில் அவ் வருமானத்தின் ஒரு பகுதியை தொடர்ந்து சேமித்துக்கொள்ள இத்திட்டம் உதவி செய்யும். MOIA ஆனது ஓய்வூதியம் மற்றும் மறுகுடியேற்றம் ஆகியவற்றுக்காக அதன் சொந்த பட்ஜெட்டில் இருந்து பங்களிக்கும். MOIA ஆனது ஒரு ஆயுள் காப்புறுதி திட்டத்தையும் அனைத்து MGPSY சந்தாதாரர்களுக்கும் வழங்கும்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள ஆர்வமாகவுள்ள தகுதியுள்ள பணியாளர்கள் தகுந்த விண்ணப்பப் படிவங்களையும் அடையாள ஆதார ஆவணங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

## தகுதியுடைமை

1. ECR கடவுச்சீட்டு (Passport) மற்றும் ECR நாடொன்றில் செல்லுபடியாகும் ஒரு பணி அனுமதி அல்லது வேலை ஒப்பந்தம்
2. 18 க்கும் 50 க்கும் இடைப்பட்ட வயது
3. சொந்தப் பெயரில் வங்கிக் கணக்கு

## பயன்கள்

இத்திட்டத்தில் இணைகின்ற தகுதியுடைய வெளிநாட்டில் பணிபுரியும் பணியாளர்கள் 3 முக்கியமான பயன்களைப் பெறுவார்கள்:

1. NPS-லைட் இடமிருந்து ஓய்வூதிய பயன்
2. UTI AMC இடமிருந்து திரும்பிவந்து மறுகுடியேறும் (R&R) சேமிப்புகள்
3. LIC இடமிருந்து இலவச ஆயுள் காப்புறுதிப் பயன்

## திட்டம் பங்குதாரர் நிறுவனங்கள்

NPS Lite — Aapki Pension Aapke Haath

UTI Mutual Fund

LIC — भारतीय जीवन बीमा निगम — LIFE INSURANCE CORPORATION OF INDIA

बैंक ऑफ़ बड़ौदा — Bank of Baroda

| சந்தாதாரர் | ஆண்டொன்றுக்கு சந்தாதாரர் ஒருவருக்கான குறைந்தபட்ச சேமிப்புத் தொகை | ஆண்டொன்றுக்கு சந்தாதாரர் ஒருவருக்கான MOIA பங்களிப்புகள் | ஆண்டொன்றுக்கு சந்தாதாரர் ஒருவருக்கான மொத்த சேமிப்புத் தொகை |
|---|---|---|---|
| பெண் பணியாளர்கள் | **5,000** ரூபாய் | **2,000+900** ரூபாய் | **7,900** ரூபாய் |
| ஆண் பணியாளர்கள் | **5,000** ரூபாய் | **1,000+900** ரூபாய் | **6,900** ரூபாய் |

*MOIA* இன் பங்களிப்பு 5 ஆண்டுகளுக்கு அல்லது வெளிநாட்டில் பணிபுரிந்த காலத்துக்கு இதில் எது குறைவோ அந்த காலத்துக்கு வழங்கப்படும்.

**MGPSY** பயன்கள் தொடர்பான கூடுதல் தகவலுக்கு அல்லது திட்டத்தில் இணைந்துகொள்ள, தயவுசெய்து தொடர்புகொள்ளுங்கள்

பாங்க் ஆஃப் பரோடா கிளை, இந்திய தொழிலாளர் வள மையம்- UAE அலுவலகம் 3PM-7PM(வேலை நாட்களில்)

உதவி (இலவசம்) அழைப்பு: ***1800 113 090 (India)***, ***80046342 (UAE)***

*inf.mgpsy@moia.nic.in, help@iwrc-uae.com*

## மகாத்மா காந்தி பிரவாசி சுரக்ஷா யோஜானா வில் இன்றே இணையுங்கள்!

முக்கியம்: இந்தத் திட்டத்தில் இணையும் முன் அல்லது இணைந்த பின்னர் தயவுசெய்து எவருக்கும் பணம் செலுத்தாதீர்கள்.

© 2012, வெளிநாடு வாழ் இந்தியர் நல அமைச்சகம்